[20th April 1959.

THE HON. SRI R. VENKATARAMAN : அம்பர் சர்க்காவிற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் அநேகமாக இங்கேயே செய்கிறோம். யந்திரங்களுக்கு வேண்டிய ஒரே ஒரு பார்ட் மட்டும் வெளி நாட்டிலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. அது வந்தால் அனேகமாக அதிகப்படியான எண்ணிக்கை செய்ய முடியும். அதன் பிறகு வெளி நாட்டு உதவியை எதிர்பார்க்க வேண்டியதில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : All parts are manufactured here. The machine required for manufacturing parts is wanted.

SRI K. SATTANATHA KARAYALAR : சில பொருள்கள் தருவிப்பதில் சில சிக்கல்கள் இருக்கிறது என்ற அடிப்படையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சில திட்டங்களை நிறைவேற்ற முடியாது என்று தோன்றுகிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினருக்கு நம்பிக்கை இல்லாமல் இருப்பதுபோல் எங்களுக்கு இல்லை. போடக் கூடிய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. சாதாரணமாக நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

SRI T. KARIA GOUNDER : 'வுல் ப்ராரசை' விண்ண மங்கலத்தில் எப்பொழுது ஆரம்பிக்கப் போகிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கு வெளி நாட்டிலிருந்து யந்திரங்கள் வரவேண்டியதாக இருக்கிறது. அதற்கான வேலைகளும் இன்னும் சாங்ஷன் ஆகவில்லை.

SRI A. VEDARATHNAM : அம்பர் சர்க்காவைச் செய்வதற்கு ஒரு பார்ட் மாத்திரம் வெளிநாட்டிலிருந்து வரவழைக்க வேண்டியதாக இருக்கிறது என்று சொன்னார். அந்தப் பார்ட்டை இங்கேயே தயாரிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அந்தப் பார்ட்டை செய்வதற்கான யந்திரங்களை இங்கே வரவழைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பால்பேரிங் போன்ற முக்கியமான சாமான்கள் வெளிநாட்டிலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. கியர் வீல் முதலியவைகள் கூட வரவேண்டியதாக இருக்கிறது. அவைகளை இங்கே செய்ய முடியாது. அவைகளை வரவழைத்தால் அதிகப்படியாக அம்பர் சர்க்காவை இங்கே தயாரிக்க முடியும். அதற்கு வெளி நாட்டு செலவாணியை அதிகரிக்க வேண்டும் என்று வற்புறுத்தி கொண்டிருக்கிறோம்.

Labbai Community

* 5 Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI M. S. SELVARAJAN) : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government propose to include the Labbai Community in the list of "Most Backward Classes"?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI S. LAZAR : பொருளாதார ரீதியில் இந்த சமுகத்திற்கு சலுகைகள் வழங்குவதற்கு சர்க்காரிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அப்படி இருந்தால் அது எப்பொழுது அமுலுக்கு வரும் ?

20th April 1959]

THE HON. SRI P. KAKKAN : அது பரிசீலனையில் இருக்கிறது.

SRIMATHI HEMALATHA DEVI : ஏற்கெனவே லப்பை என்ற இனத்தை மோஸ்ட் பாக்வார்ட் கம்யூனிட்டி லிஸ்டில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ? தற்போது நீக்கியதன் காரணமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே பாக்வார்ட் கம்யூனிட்டி என்று இருக்கிறது. இன்னும் அதிகப்படியாக அதில் சேர்க்கவேண்டியதில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, now and then we find that some community people or other come before the Government for the inclusion of those people in the backward list. May I know the basis on which the classifications are made?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே பொருளாதாரத் துறையிலும் கல்வித் துறையிலும் பின் தங்கியவர்களாக இருந்தால் அவர்களைப் பற்றி பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வருவார்கள்.

SRI V. SUBBIAH : பிராமணர்களில் முக்காணியர் என்று என்னுடைய பகுதியாகிய கோவில்பட்டியிலும் திருச்செந்தூரிலும் இருக்கிறார்கள். அதிலும் என் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். என் பகுதியில் நாலைந்து கிராமங்களில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் இதில் என் சேர்க்கவில்லை ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே சொன்னேன், இதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்று.

Firewood

* 6 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to reduce the prices of firewood in Madras City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The rice in prices of firewood is reported to have been due to temporary shortage of stocks caused by non-arrival of stocks from the Districts. There is however no scarcity of firewood in the city and the prices are expected to go down as soon as the expected stocks arrive.

SRI N. K. P. PALANISAMI : இரண்டு வருடகாலமாகவே சென்னையில் விறகு விலை அதிகமாக விற்கப்படுகிறது. இது விஷயமாக சர்க்காருடைய கருத்தை நான் வரவேற்கிறேன். பல டிஸ்டிரிக்ட் சென்டர்கள் கொடுக்க முன் வராததன் காரணமாக இப்படி விற்கப்படுகிறது. குறைந்த விலையில் விறகு சென்னையில் விற்பதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON SRI M. BHAKTAVATSALAM : இது சென்னை நகரத்தைப் பற்றிய கேள்வி என்னிடத்தில் இருக்கும் தகவல், ஒரு டன்னுக்கு ஐந்து ரூபாய் அதிகப்பட்டிகிறது. சவுக்கு விறகு டன் ஒன்றுக்கு 65 ரூபாய்என்று விற்கப் படுகிறது. காட்டு விறகு 50 ரூபாய் என்று விற்கப்படுறது. சென்னைக்கு வருகிற விறகு எல்லாம் ரயிலில் வருவதாக இல்லை. பக்கிங்ஹாம் கால்வாய் வழியாகத்தான் வருகிறது. சில சமயங்களில் எதிர் பார்க்கிற அளவு வருவது இல்லை. அந்தச் சமயங்களில் அரசாங்கம் அதை கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறது.